செய்தி வெளியீடு எண்: 263 நாள் : 04.06.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜய பாஸ்கர் அவர்கள் சென்னை புறநகர் பேருந்து நிலையத்தை இன்று (04.06.2016) ஆய்வு செய்தார்.

அங்கு செயல்பட்டுவரும் மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கும் மையத்தினை ஆய்வு செய்தார். மேலும், மூத்த குடிமக்களுக்கு இருக்கை வசதி, குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார்.

அதேபோன்று, சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் செயல்பட்டுவரும் அம்மா குடிநீர் விற்பனை மையத்தையும் பார்வையிட்டு, பேருந்து நிலையத்தின் உட்பகுதிகளில் அமைந்துள்ள நடைமேடைகளில் சென்று அங்கு பணிபுரியும் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏதும் இல்லா வகையில், பேருந்துகளை குறித்த நேரத்திற்கு இயக்குமாறு அறிவுறித்தினார்.

மேலும், மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலுக்கு அமாவாசையை முன்னிட்டு இயக்கப்பட்ட சிறப்பு பேருந்து இயக்கத்தினையும் பார்வையிட்டார்.

அதன்பிறகு, மாநகர் போக்குவரத்துக் கழக ஆவடி பணிமனையிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த சிறப்பு திட்டமான மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கும் மையத்தினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.எம்.பாலகிருஷ்ணசாமி, தமிழ்நாடு விரைவுபோக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.வி.நடராஜன், மாநகர் போக்குவரத்துக் கழக பொதுமேலாளர்(இயக்கம்) திரு.பி.எஸ்.சுரேஷ்பாலையா, பொது மேலாளர்(தொழிற்நுட்பம்) திரு. எம்.ஏ.முருகேசன் மற்றும் பொது மேலாளர்(வடக்கு) திரு.ஜி.கணேசன் அவர்களும் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9